DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, KANCHEEPURAM

| | | | |
|---|---|---|---|
| SESSIONS | 31 | of | 2019 |

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | Prosecution | PW | 1 |

| | |
|---|---|
| பெயர் | சுரேஷ் |
| தந்தை பெயர் | தலைமைகாவர் |
| கிராமம் | |
| தொழில் | |
| வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07 th day of April 2026

நாள்: 07 .04.2026 – அ.சா. (எதிரி இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது விஷ்ணுகாஞ்சி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017 இல் நான் பாலு செட்டி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியிலிருந்தேன். கடந்த 20.08.2017 ஆம் தேதி உதவி ஆய்வாளர் திரு.சங்கர் அவர்களுக்கு டிராக்டர் மற்றும் ட்ரெய்லரில் மண்ணு ஓட்டுவதாக கிடைத்த தகவலின் பேரில் நானும், காவலர் 1841 தாமோதரன் அவர்களும் வதியூர் பம்பை கால்வாய் அருகில் போகும்போது TN21AB6172 என்ற பதிவு எண் கொண்ட டிராக்டரும் அதன் டிரெய்லர் பதிவு எண் TN02X2579 என்ற பதிவு எண் கொண்ட ட்ரெய்லரில்

மண்ணை வாரி போட்டுக் கொண்டிருந்தார்கள். எங்களை பார்த்தவுடன் சங்கர் ஓடிவிட்டார். எதிரி சங்கர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. அவரை எனக்கு அடையாளம் தெரியும். அவர் வாக்குமூலம் கொடுக்கும் போது நான் உடன் இருந்தேன். அவரை மடக்கி பிடித்து கேட்டபோது ட்ரெய்லரில் இரண்டு யூனிட் மணல் இருந்தது. அவருடைய சுயலாபத்திற்காக அரசாங்கத்தின் பில்லோ. ரசிதோ எதுவும் இல்லாமல் அனல் வைத்திருந்தார். திருட்டுத்தனமாக அவர் மணல் அள்ளியதால் உதவி ஆய்வாளர் திரு.சங்கர் அவர்கள் அவரை காலை 10 மணிக்கு கைது செய்தார். அங்கு பொதுமக்கள் யாரும் இல்லாததால் நானும் காவலர் 1841 தாமோதரன் அவர்களும் சாட்சியாக இருந்தோம். வாகனத்தையும் டிராக்டர் மற்றும் ட்ரெய்லரை கைப்பற்றுவதற்கு மற்றும் எதிரியின் வாக்குமூலம் பதிவு செய்வதற்கும் சாட்சியாக இருந்தோம். எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ சா ஆ 1 ஆக குறியீடு செய்கிறேன்.** ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் காவலர் தாமோதரனின் கையப்பமாகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் வகைகளில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அதில் முதல் கையொப்பம் காவலர் தாமோதரன் கையொப்பமாகும். கைப்பற்றுதல் மகஜர் **அ சா ஆ 2 ஆக குறியீடு செய்கிறேன்.** அதன் பிறகு காலை 11 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கையொபம் பெற்றார்கள். பின்பு பகல் 12.30 மணிக்கு எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து முதல் தகவல் அறிக்கை உதவி ஆய்வாளர் திரு.சங்கர் அவர்கள் பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளது உதவி ஆய்வளாரால் கைப்பற்றப்பட்ட டிராக்டர் மற்றும்

டிராய்லர் புகைப்படங்கள் ஆகும். அவை **அ சா ஆ 3 வரிகையாக ( 2 எண்ணிக்கை) ஆக குறியீடு செய்கிறேன்.** இது சம்பந்தமாக ஆய்வாளர் எள்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் சாட்சிகள் தாமோதரன் சங்கர் மற்றும் பிரபாகரன் ஆகியோர் ஒரே காவல் நிலையத்தில் பணிபுரியும் நபர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு யார் யார் என்னென்ன வாகனத்தில் சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் அவருடைய இருசக்கர வாகனத்திலும், நான் என்னுடைய இருசக்கர வாகனத்திலும் சென்றோம். இந்த விவரங்களை முதல் விசாரணையிலோ அல்லது போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் 20.08.2017 அன்று பகல் 12.30 மணிக்கு எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 11 மணிக்கு தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் முன்கூட்டியே சட்டப்பிரிவுகள் மற்றும் வழக்கின் எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. கைப்பற்றுதல் மகசரில் சாட்சியாக கையொப்பம் செய்த நிலையில் அந்த விவரங்களை தெரியாது என்று எதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் அவர் போனில் கேட்டு எண் பெற்றாரா என்று எனக்கு தெரியவில்லை. மணலில் பலவகை மண் உள்ளது. நாங்கள் பறிமுதல் செய்தது ஆற்று மணல் தான் என்பதை நிரூபிக்க அது சம்பந்தமாக பரிசோதனை எதுவும் செய்யப்பட்டதா என்பது எனக்கு தெரியவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் யாரால் தட்டச்சு செய்யப்பட்டு யாரால் நகல் எடுத்து வரப்பட்டு வழங்கப்பட்டது என்றால் உதவி ஆய்வாளர் திரு.சங்கர் அவர்கள் அவராகவே தட்டச்சு செய்து நகல் காவல் நிலையத்தில் வந்த எடுக்கப்பட்டது. இந்த விவரத்தை எனது முதல் விசாரணையிலோ

அல்லது போலீஸ் விசாரணையிலோ நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பத்திற்கும் ஒப்புதல் வாக்கு மூலத்தில் போடப்பட்டுள்ள இரண்டாவது கையொப்பத்திற்கும் அதிக வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல இரண்டும் என்னுடைய கையொப்பம் தான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை நான் கூறியவாறு எந்த மணல் கொள்ளையும் நடக்கவில்லை எந்த ஆவணமும் கைப்பற்றவில்லை மற்றும் எந்த வாகனமும் கைப்பற்றவில்லை என்றும் என்னுடைய உயர் அதிகாரி கூறியதன் பெயரில் அவருக்கு பவ்யப்பட்டு நான் பொய் சாட்சி மன்னிக்கிறேன் என்றும் இந்த வழக்கு புள்ளி விவரங்களுக்காக போடப்பட்ட ஒரு வழக்கு என்றால் சரியல்ல. ஆ சா ஆ 3 எங்கள் காவல் நிலையத்தில் நிறுத்தி வைத்தி'ருந்த வாக்னங்களில் புகைப்படம் எடுத்த புகைப்படங்கள் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Judge,
Kancheepuram.